# தேவகோட்டை நகராட்சி

தேவகோட்டை நகராட்சி வளாகத்தில் சாதாரணக்கூட்டம் தனிஅலுவலரால் 23.07.2021ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## பொருள்–75

தேவகோட்டை நகராட்சி ஆண்டவர் செட் அருகில் ஆவின் பாலகம் அமைக்க ஆவின் கிளை மேலாளர் அவர்களின் கடித ந.க.எண்:900/வி.பி.1/2017 நாள்:01.7.2021–ன்படி போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் மேற்படி இடத்தில் அனுமதி ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஆவின் பாலகம் அமைக்கவில்லை என்பதால் மேற்படி இடத்திற்கான இடவாடகையினை கணினி கேட்பிலிருந்து தொகை ரூ.216729/– நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 75**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 76

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கு 2021–2022 ஆம் ஆண்டுக்கு செய்தித்தாளில் அறிவிப்பு செய்த வகையில் பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல்படி தினத்தந்தி நாளிதழ் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| Bill No.: | MDU2122 – 0004266 |
| Bill Date: | 12.07.2021 |
| Amount : | Rs.21168/- |

**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 76**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 77

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் நடவடிக்கை கடிதம் எண்: 175/2020/சிமா–2, நாள்:20.01.2021–ன்ப 1. K.மணிகண்டன் மற்றும் A.சவரிமுத்து என்பவர்களுக்கு சொந்தமான தேவகோட்டை வட்டம் நகராட்சி வார்டு – A , பிளாக் –20 நகரவை எண் 12, 13/15–இல் மொத்தப்பரப்பளவு 6956.00 ச.மீ. (1.71 ஏக்கர்)–ல் உள்ள மனைப்பிரிவிற்கு சில நிபந்தனைகளுடன் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும் மனுதாரரின் 2310.2020 நாள் 22.07.2021 கடிதத்தின்படி பரிந்துரைக்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் மின்கம்பங்களுக்கான தொகை செலுத்தி மனைப்பிரிவிற்கு ஒப்புதல் மற்றும் அங்கீகாராம் கோரினார். அதன்படி தனியாருக்கு மனை வரன்முறை செய்து அளிக்க ஏதுவாக நிபந்தனைகளுக்கு அறிக்கை பெற கோரப்பட்டது. அதன்படி நகரமைப்பு ஆய்வரின் குறிப்பின்படி, மனுதாரர் மனைப்பிரிவு இடத்தில் தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் மழைநீர் வடிகால் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் ஏற்படுத்தியும் உள்ளார் என்றும், மேலும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு நிபந்தனைகளுடன் மனுதாரரின் மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 77**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 78

தேவகோட்டை நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்:23 நித்திய கல்யாணிபுரம், செந்தூர் நகர் மற்றும் K.T.H சிறுபாலம் உடைந்து உபயோகமற்ற நிலையில் இருந்தது. இந்நிலையில் வடகிழக்கு பருவமழை பெய்ததால் மற்றும் புயல் வெள்ளம் காரணமாக முற்றிலும் சேதமடைந்துள்ளது. அதனால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து பயன்படுத்த முடியாமல் உள்ளது. எனவே பாலத்தை இடித்து அப்புறபடுத்தி புதிய பாலம் அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 78**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 79

தேவகோட்டை நகராட்சி பகுதிகளில் உள்ள 27 வார்டு பகுதிகளில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் 13.50 மெ.டன் திடக்கழிவுகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பை என பிரித்தெடுக்கப்பட்டு வருகிறது. அவற்றில் மக்கும் தன்மையுள்ள உரமாக்கும் திடக்கழிவுகள் 8.7 மெ.டன் வரையில் பிரித்து எடுக்கப்பட்டு அவை நகராட்சி நுண்ணுயிர் உரமாக்கும் மையத்திற்கு எடுத்து செல்லப்பட்டு அரசு விதிமுறைகளின்படி இயற்கை முறையில் உரமாக்கப்பட்டு வருகிறது. மேலும் உற்பத்தி செய்த உரங்களை சுத்தமாக பிரித்து எடுக்கவும், பேக்கிங் செய்யவும் கீழ்காணும் விபரப்படியான பொருள்கள் தேவைப்படுகிறது.

1) பேக்கிங் செய்ய தேவையான பிளாஸ்டிக் பைகள் (12 x 10) = 10 கிலோ
2) எடைபோட எடை தராசுகள் = 03 எண்ணம்
3) பேக்கிங் மெசின்கள் = 03 எண்ணம்
4) சலித்து சுத்தம் செய்ய சல்லடைகள் = 03 எண்ணம்

மேற்காணும் விபரப்படியான பொருள்களை வாங்கி பணி நடவடிக்கை தொடரவும் உடன் விலைப்புள்ளி பெற்று மேல்நடவடிக்கை தொடரவும் அதற்காகும் உத்தேச செலவீனம் துப்பரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி ரூ.50,000/–க்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 79**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 80

ஊராட்சி ஒன்றிய ஆணையரின் அவர்களின் ந.க.எண் அ2/706/2015 நாள் 16.03.2017ம் தேதிய கடிதத்தின்படியும், வட்டார பொறியாளர்,ஊராட்சி ஒன்றியம் தேவகோட்டை அவர்களின் அறிக்கையின்படியும் வருவாய் ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படியும் இவ்வலுவலக இந்நகர் மன்ற தீர்மான எண் 311 நாள் 17.08.2017ன் படி 2017–2018ம் ஆண்டில் கீழ்காணும் வரிவிதிப்பு எண் பயன்படுத்த இயலாத சூழ்நிலையில் உள்ளது என தெரிவிக்கப்பட்டு கோப்பு வஜா செய்யப்பட்டு 01.04.2017 முதல் வரிவிதிப்பு ரத்து செய்ய மன்ற தீர்மானம் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி வரிவிதிப்பு எண்களுக்கான கோப்பினை 01.04.2018 முதல் 31.03.2022 வரை உள்ள கேட்பினை வஜா செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. 110/4685 – 2018 – 2019 முதல் 2021 – 2022 வரை ரூ.22504/–
2. 110/4686 – 2018 – 2019 முதல் 2021 – 2022 வரை ரூ.5,472/–

3. 110/4690 – 2018 – 2019 முதல் 2021 – 2022 வரை ரூ.6048/–
4. 110/4691 – 2018 – 2019 முதல் 2021 – 2022 வரை ரூ.4288/–
5. 110/4693 – 2018 – 2019 முதல் 2021 – 2022 வரை ரூ.5008/–
6. 110/4694 – 2018 – 2019 முதல் 2021 – 2022 வரை ரூ.5008/–
7. 110/4695 – 2018 – 2019 முதல் 2021 – 2022 வரை ரூ.4000/–
8. 110/4696 – 2018 – 2019 முதல் 2021 – 2022 வரை ரூ.4000/–
9. 110/4692 – 2018 – 2019 முதல் 2021 – 2022 வரை ரூ.4288/–

**தீர்மான எண்: 80**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 81

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நீர்நிலைகள் மற்றும் குளங்கள் போன்றவற்றை சுத்த செய்ய 19.06.2001–ந் தேதிய மாவட்ட ஆட்சியர், சிவகங்கை அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி இந்நகர் பகுதிகளில் உள்ள 6 குளங்களை சுத்தம் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி குளங்களை சுற்றியுள்ள பகுதிகளில் தூய்மை பணியாளர்கள் மூலமாகவும் குளங்களை சுற்றியுள்ள கருவேல மரங்களையும் முட்புதர்களையும் அகற்ற முடியாத கருவேல மரங்களை JCB வாகனத்தின் மூலமாகவும் சுத்தம் செய்யவும் குளத்தில் உட்பகுதிகளில் உள்ள நாணல்கள் மற்றும் தாமரைச் செடிகளை தூய்மை பணியாளர்கள் மூலம் சுத்தம் செய்ய இயலாததால் மீனவர்கள் பயன்படுத்தும் பரிசல்கள் மூலம் சுத்தம் செய்து அப்புறப்படுத்திடவும் மேற்படி பணியை உள்ளூர் குறைந்த விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.2,00,000/–த்திற்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்காணும் செலவு பொதுநிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம்அனுமதிக்கலாம்.
இ) உள்ளூர் விலைப்புள்ளி பெற்றுகுறைந்த விலைவிகிதம் வழங்கிய நிறுவனத்துக்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 81**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 82

தேவகோட்டை நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணிகளுக்கு UPS பேட்டரி இரண்டு எண்ணம் வாங்கிட 08.07.2021–ந் தேதிய விலைப்புள்ளி அறிவிப்பின்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை.(ரூ) |
|---|---|---|
| 1 | SBM பேட்டரி ஏஜன்ஸிஸ், காரைக்குடி<br>LUCAS 150AH/12V Tan Tublar Batteries – 02 Nos. | 31,200/– |
| 2 | ALS Enterprises, காரைக்குடி<br>Lucas Batteries 150AH/12V Tublar Batteries – 2 No., | 32,000/– |
| 3 | AVR Batteries, காரைக்குடி<br>Lucas TVSAH/12V Tublar Batteries – 2 Nos. | 32,600/– |

மேற்காணும் நிறுவனத்திடம் இருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் SBM பேட்டரி ஏஜன்ஸிஸ் நிறுவனத்தாரின் விலைப்புள்ளிகள் குறைவாக உள்ளது. ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்படி புதிய பேட்டரி வாங்கிட பழைய பேட்டரிகளை எடுத்துக் கொள்ள அதன் விலையை புதிய பேட்டரி விலையில் கழிவு செய்யவுள்ளதை மன்றம் ஏற்கலாம்.
இ) மேற்காணும் பணிகளை செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 82**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 83

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட 8–வது வார்டு சிவன் கோவில் குளக்கால் தெரு உள்ளது. இச்சாலையின் ஓரம் கருவேல மரங்கள் புதர்போல் வளர்ந்து உள்ளதால் போக்குவரத்திற்கு இடையூராகவும் மற்றும் விஷப் பூச்சிகள் வீடுகளில் புகுந்து விடுகிறது. அதனால் பொதுமக்கள் மிகவும் அச்சத்துடன் உள்ளனர். மேலும் பொதுமக்கள் பாதுகாப்பை கருத்தில் கொண்டு வீடுகளில் அருகில் மற்றும் சாலையோரங்களில் உள்ள கருவேல மரங்களை அகற்றுவது அவசியமாகிறது. எனவே மேற்கண்ட பணியை செய்து முடிக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 83**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 84

தேவகோட்டை நகராட்சியில் பொதுநிதி 2020-2021-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 20.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையீன் பெயர் | மதப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் – 22 ஜீவாநகர் பகுதியில் அமைந்துள்ள சமுதாயகூட வளாகத்தில் சமையல் கூடம் அமைத்தல் பணி. | 9.20 | 1)திரு. M.மணிகண்டன் | 0.21 % குறைவு |
| | | | 2) திரு. T. பாண்டி | 3.89 % அதிகம் |

**அலுவலக குறிப்பு: –**

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டைவிட குறைவாக பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மான எண்: 84**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள்: 85

தேவகோட்டை நகராட்சியின் ஈப்பு வாகனம் TN–63–AS–1648 வாகனம் தற்போது இயக்க முடியாத நிலையில் பழுதுநீக்கம் செய்ய வேண்டியது அவசியமாகிறது என 21.06.2021 தேதிய கடிதம் அலுவலக ஓட்டுநரால் தரப்பெற்றுள்ளது. வாகனத்தின் கேபின் மற்றும் டோர்கள் அனைத்தும் துருப்பிடித்து உடையும் நிலையில் உள்ளதால் வாகனத்தின் டோர்கள் மற்றும் கேபினில் அனைத்து பகுதிகளும் டிஙகரிங் செய்து பெயிண்டிங் செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்படி பணிக்கு உத்தேச செலவீனம் ரூ.65,000/– த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 85**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.